# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் 18-11-2021 வியாழக்கிழமை நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்

**பொருள் எண். 1**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1-ல் அமைந்துள்ள ஜாக்கப் நகர் முதல் நரியன்விளை சாலை வரை தார் சாலை மற்றும் சிமெண்ட் சாலையாக மாற்றப்படாமல் கல் சாலையாக உள்ளது. மழையின் காரணமாக சாலை மிகவும் சேதமடைந்துள்ளதால் பொது மக்களின் போக்குவரத்து மிகவும் பாதிப்படைந்து உள்ளது. எனவே இச்சாலையை சிமெண்ட் சாலையாக மாற்றுவதற்கு மதிப்பீடு ரூ.18.90 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது- பணியின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு மேற்படி பணியினை 15-வது நிதிக்குழு மானியம் 2020-2021-ன்கீழ் Untied Grant-ல் மேற்கொள்ளவும் மேற்படி பணிக்கு தொழில் நுட்ப அனுமதி பெற நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் திருநெல்வேலி அவர்களுக்கு கடிதம் சமர்ப்பிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3764**

**அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் எண். 2**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7-ல் அமைந்துள்ள பெருங்குளம் முதல் கல்பாலத்தடி இசக்கியம்மன்கோவில் வரையுள்ள சாலையின் மின்கம்பம் எண்.60 மற்றும் 63 அருகில் தற்பொழுது பெய்த கனமழையின் காரணமாக உடைப்பு ஏற்பட்டு பொதுமக்களின் போக்குவரத்திற்கு மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனை சரி செய்வதற்கான ரூ.36.25 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. பணியின் அவசியம் மற்றும் அவசரத்தினை கருத்தில் கொண்டு 15-வது நிதிக்குழு மானியம் 2020-2021-ன்கீழ் Untied Grant-ல்

பணியினை மேற்கொள்ளவும் இப்பணிக்கான நிர்வாக அனுமதி, தொழிற்நுட்ப அனுமதி பெறுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், திருநெல்வேலி அவர்களுக்கு கடிதம் சமர்ப்பிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3765**
**அனுமதிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண். 3</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2-ல் அமைந்துள்ள பெருங்குளம் முதல் கழுவன்திட்டை வரை ஹரிஜன் காலணி வரையுள்ள சாலையில் தற்பொழுது பெய்து வந்த கனமழையின் காரணமாகவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் குழாய் பதித்ததன் காரணமாகவும் சாலை துண்டிக்கப்பட்டு பொது மக்களின் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. இதனை சரி செய்ய ரூ.1.85 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு 15-வது நிதிக்குழு மானியம் 2020-2021-ன்கீழ் Untied Grant-ல் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3766**
**அனுமதிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண். 4</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11-ல் அமைந்துள்ள குருசடி முதல் சிங்கிளேயர் தெரு வரை உள்ள சாலை தற்பொழுது பெய்த மழையின் காரணமாகவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம்

குழாய் அமைத்ததாலும் மிகவும் சேதமடைந்து பொது மக்களின் போக்குவரத்து மிகவும் பாதிப்படைந்துள்ளது. இதனை சரி செய்ய ரூ.24.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி இப்பணியினை 15-வது மான்ய நிதிக்குழு 2021-2022-ன்கீழ் Untied Grant-ல் மேற்கொள்ளவும், நகராட்சி நிர்வாகப் பொறியாளர், திருநெல்வேலி அவர்களுக்கு கடிதம் சமர்ப்பிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3767**
**அனுமதிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண். 5</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள குடியிருப்புகளில் இருந்து வெளியேறும் கழிவு நீரானது வடிகாலின் மூலம் ஆற்றிற்கு செல்வதால் ஆறு மாசு அடைவதாக பல புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. இதனை தடுப்பதற்கு வீட்டிலிருந்து வெளியேறும் கழிவுநீரை வீட்டுக்காரர்கள் வீட்டு வளாகத்திற்குள்ளேயே உறிஞ்சு குழி அமைத்து கடத்த வழிவகை செய்யுமாறு தமிழ்நாடு தகவல் தொழிற்நுட்ப துறை அமைச்சர் அவர்களால் ஆய்வு கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. அதன்படி பொது மக்களுக்கு உறிஞ்சுகுழி அமைக்கும் திட்டத்தை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக அதற்கான மாதிரி வடிவத்தை நகராட்சி அலுவலகத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கும் படியாக வலியுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் Plywood மூலம் ஒரு மாதிரி வடிவத்தை தயார் செய்ய ஆகும். உத்தேச செலவினம் ரூ.31,000/- ஆகும் பணியின் அவசர மற்றும் அவசியம் கருதி இப்பணியினை நகராட்சி பிரிவு 15-ன்கீழ் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3768**
**அனுமதிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண். 7</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் 01-09-2021 அன்று நடத்தப்பட்ட ஜல்ஜீவன் மிஷன் மற்றும் அம்ரூத் 2.0 என்ற திட்டத்திற்கான ஆய்வுக் கூட்டத்தில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்கு, சாலை வடிகால் மற்றும் சிறுபாலம் முதலியவற்றைக் கணக்கீடு செய்து அதற்கான வரைபடங்களை செப்டம்பர் மாத இறுதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தி உள்ளார்கள். அதன்படி வரைபடங்களுக்கான தகவல்களை சேகரிப்பதற்கு போதிய அளவு பணியாட்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தினால் அதனை ஒரு ஒப்பந்ததாரரிடம் ஒப்படைத்து பணியினை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டு உள்ளூர் விலைப்புளிகள் 3 ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. பணியினை அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு இப்பணியினை நகராட்சி பிரிவு 15-ன்கீழ் மேற்கொள்ள விலைப்புள்ளிகள் வரப்பெற்ற விவரம் கீழ்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | CRRA General Construction private Ltd. | Rs.425000/- |
| 2 | Thiru.S. Babu, Kannacode, Marthandam | Rs.430000/- |
| 3 | Thiru.D. Justin kumar, Kuzhithurai | Rs.400000/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.டி. ஜஸ்டின்குமார் என்பவரின் விலைப்புள்ளியின் ஏற்று பணியினை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3769**
**அங்கீகரிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண். 7</u>**

குழித்துறை நகராட்சியில் உள்ள அம்மா உணவகத்தின் உள்ள Wash Basin மற்றும் கதவு பழுதாகி உள்ளதால் அவற்றை சரி செய்யவும் பேருந்து நிலையம் பின்புறம் உள்ள கழிவுநீர் குழாய் பழுதாகி சாலையில் கழிவுநீர்

பாய்ந்து செல்வதால் கழிவுநீர் குழாயை சரி செய்யவும் நகராட்சி அலுவலகம் மற்றும் நம்மா கழிப்பறையில் Ramp வசதி இல்லாத காரணத்தினால் உடல் ஊனமுற்றவர்கள் படிகட்டுகளில் எரி செல்ல மிகவும் சிரமாக உள்ள காரணத்தினால் இவ்விரு இடங்களிலும் Ramp வசதி ஏற்படுத்தவும் மற்றும் விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு ஆற்றுபடுக்கைகளின் ஒரமாக விளக்குகள் பொருத்தி தருமாறு காவல் துறையினரின் வேண்டுகோளுக்கிணங்க ஆற்று படுக்கைகளில் ஒரமாக விளக்குகள் பொருத்தும் பணிகள் மேற்கொள்ள ரூ.1,65,000/-க்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மேற்குறிய பணிகளை நகராட்சி பிரிவு 15-ன்கீழ் விரைந்து முடிக்க ஒப்பந்ததாரர் திரு. பாபு அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3770**
**அங்கீகரிக்கப்படுகிறது.**

**பொருள் எண். 8**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பம்மம் முதல் குழித்துறை நகராட்சி எல்கை முடிவு மற்றும் பேருந்து நிலையம் முதல் கிறிஸ்துராஜ பள்ளி வரை) பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் நலன் கருதி மேற்குறிப்பிட்ட இடங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்துவதற்கு காவல் துறையினர் மற்றும் பொதுமக்கள் விண்ணப்பித்துள்ள காரணத்தினால் இப்பணியினை மேற்கொள்ள ரூ.6,50,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை நமக்கு நாமே திட்டத்தின்கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு,.- மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3771**
**அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் எண். 9**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு தலைமை நீரேற்று நிலையம் மூலம் தாமிரபரணி மற்றும் சப்பாத்தில் இருந்து குழித்துறை நகராட்சியில் உள்ள 21 வார்டுகளுக்கும் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. சப்பாத்து பகுதியில் உள்ள பம்பு அறையில் 10HP Submersible Pump set 6 வருடங்களுக்கு முன்பு வாங்கப்பட்டு தற்பொழுது பழுதாகியுள்ள காரணத்தினால் குடிநீர் வினியோகம் செய்வதில் சிக்கல் நிலவுகிறது. எனவே குடிநீர் வினியோகம் தடையின்றி

செய்வதற்கு சப்பாத்து பம்பு அறையில் இரண்டு எண்ணம் புதிய 10HP Submersible Motor வாங்கி பொருத்துவதற்கு ரூ.1,85,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் பொது மக்களுக்கு குடிநீர் தங்கு தடையின்றி செல்ல இப்பணியினை அவசரம் மற்றும் அ'வசியத்தை கருத்தில் கொண்டு நகராட்சி பிரிவு 15-ன்கீழ் மேற்கொள்ள ஒப்பந்தத்தாரர் A.S. Power solution மூலம் பணி ஒப்படைக்க மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3772**
**அங்கீகரிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண். 10</u>**

குழித்துறை நகராட்சியில் இயங்கி கொண்டிருந்த 3 கணினிகள் ஒரு மாணிட்டர் மற்றும் ஒரு பிரிண்டர் ஆகியவைகள் இடி மின்னல் தாக்குதல் காரணமாக பழுதடைந்துள்ளது. மேற்படி பிரிண்டர் மற்றும் கணினிகளை சரி செய்யப்பட்டு கணனி திட்ட அமைப்பாளர் அறிக்கை செய்துள்ளார். அதன்படி மேற்படி பொருட்களை சரி செய்ய உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் அதன் விபரம் கீழ்வருமாறு.

1) Aswin Computers - Rs. 26075
2) Alpha Technologies - Rs. 26900
3) Install Computers - Rs. 27475

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Aswin Computers என்ற நிறுவனத்திற்கு பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு வேலை செய்ய உத்தரவு வழங்கலாம்.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3773**
**அனுமதிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண். 11</u>**

குழித்துறை நகராட்சியில் ஒப்பந்தக்காரராக பணிபுரியும் திரு.சி. சுரேஷ் என்பவர் செய்த பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை வருவாய் நிதியில் ரூ.1,24,389/- காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் உள்ளதால் அதனை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2593/2021/பி1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3774**

**அனுமதிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண். 12</u>**

குழித்துறை நகராட்சியில் ஒப்பந்தக்காரராக பணிபுரியும் திரு.சி. சுரேஷ் என்பவர் செய்த பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை வருவாய் நிதியில் ரூ.89,195/- காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் உள்ளதால் அதனை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2593/2021/பி1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3775**

**அனுமதிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண். 13</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கழுவன்திட்டை மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்க இடையூறாக நிற்கும் தேக்கு மரங்களை முறித்து அப்புறப்படுத்திட பத்திரிக்கை மூலம் விளம்பரம் செய்த வகைக்கு செலவினத் தொகை ரூ.16,934/-ஐ மதுரை மணி பத்திரிக்கைக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.142/2019/அ2.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3776**

**அனுமதிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண். 14</u>**

குழித்துறை நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் வைக்கப்பட்டுள்ள HP Lazer Jet 2035 Printer 2008-ம் ஆண்டு வாங்கப்பட்டது. HP Laser Jet pro MFP M227sdm Printer 2016-ம் ஆண்டு வாங்கப்பட்டது. இந்த இரண்டு பிரிண்டர்களும் பலமுறை பழுதுகள் பார்த்தும் ஒரு சில நாட்கள் மட்டும் சரியாக இயங்கும். பின்னர் பழுது ஏற்பட்டு செயல்படாத நிலைதான் தொடர்ந்து நடைபெறுகிறது. இதனால் பொதுமக்களுக்கு பிறப்பு, இறப்பு மற்றும் கடைகளுக்கான உரிமை சான்றுகள் வழங்குதல் போன்ற அவசர அத்தியாவசிய தேவைக்கானது ஆகும். பிரிண்டரில் இருந்து எடுக்கும் நகல்களும் தெளிவாக இல்லை. எனவே பொதுசுகாதாரப்பிரிவிற்கு பிரிவில் பிறப்பு, இறப்பு பதிவு மற்றும் சான்றுகள் வழங்குவதற்கு கணினி மற்றும் பிரிண்டர் மிஷின் அத்தியாவசியமாக இருப்பதால் புதியதாக இரண்டு பிரிண்டர் மிஷின் வாங்குவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.63,000/- மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்,

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3777**
**அங்கீகரிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண். 15</u>**

குழித்துறை நகராட்சியின் தலைமை நீரேற்று நிலையத்தில் பழுதான நிலையில் உள்ள 3 மின்மோட்டார்களை மாற்றும் வகையில் புதியதாக 3 எண்ணிக்கை 7.5HP with 700LPM x 40M Head உள்ள மின்மோட்டார்கள் வாங்கி பொருத்த வேண்டியுள்ளது. பொது மக்களின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சத்தை நகராட்சியின் 15-வது மான்ய நிதிக்குழு 2020-2021-ன் Tied Grant-ல் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்,

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3778**
**அனுமதிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண். 16</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பகுதியில் Micro Compost Centre பயன்பாட்டில் உள்ளது. இங்கு சேகரமாகும் பிளாஸ்டிக் கழிவுகள் சிமெண்ட் ஆலைக்கு Paperman என்ற நிறுவனத்தின் மூலம் கொண்டு செல்லப்படுகிறது. அந்தக் கழிவுகளை 50 கிலோ அளவுள்ள கட்டுகளாக கட்டி லாரியில் ஏற்றுவதற்கு இலகுவாக கழிவுகளை press செய்து Pach பண்ண உதவும் Bale pressing Machine ஒன்று வாங்குவதற்கு ஆகும் உத்தேச செவினம் ரூ.6.10 இலட்சம் ஆகும். இச்செலவினை நகராட்சியின் 15-வது மான்ய நிதிக்குழு 2020-2021-ன் Tied Grant-ல் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்,

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3779**

**அனுமதிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண். 17</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்போது பெய்துவரும் கனமழையின் காரணமாக நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் வெட்டுவெந்நி சப்பாத்து பகுதியிலுள்ள குடிநீர் திட்ட பம்பு அறையில் தண்ணீர் புகுந்துள்ளதால் மின்மோட்டார்கள் நிறுத்தப்பட்டு குடிநீர் ஏற்றுவதற்கு நான்கு நாட்களாக தடைப்பட்டு நகராட்சியின் அனைத்து பகுதிகளிலும் குடிநீர் வினியோகம் தடைப்பட்டுள்ளது. குடிநீர் வினியோகம் சீராக வழங்கும் வரை நகராட்சி குடிநீர் லாறி மூலம் வினியோகிக்க முடியாத இடங்களில் சிறிய லாறி மூலம் வாடகைக்கு எடுத்து குடிநீர் வினியோகம் செய்ய ரூ.15,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3780**

**அனுமதிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண். 18</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் YMCA-யின் பின்புறம் உள்ள சாலையின் ஒரம் ஆபத்தான நிலையில் உள்ள இலவுமரம் தொடர் மழை காரணமாக சாய்ந்து கட்டிடம் மற்றும் உயர் மின்கம்பி மேல் விழும் சூழ்நிலையில் நின்றது. இதனால் உடமைக்கும் உயிருக்கும் ஆபத்து ஏற்படும் சூழ்நிலை உள்ளதால் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று

வட்டாட்சியர், விளவங்கோடு அவர்களின் தொலைபேசி செய்தியின்படியும் பெரும் ஆபத்தை தவிற்கும் பொருட்டு அவசர அவசியமாக மேற்படி இலவு மரம் வெட்ட வேண்டியிருந்ததால் கிரேன் இயந்திரம் பயன்படுத்தி மரத்தை வெட்டி அப்புறப்படுத்தப்பட்டது. அதற்கு ரூ.17,500/- மட்டும் செலவிடப்பட்டது. செலவிடப்பட்ட தொகை ரூ.17,500/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2260/2021/ந.அ.ஆ.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3781**

**அங்கீகரிக்கப்படுகிறது.**

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.

# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் 30-11-2021 செவ்வாய் கிழமை நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்

**பொருள் எண். 1**

மார்த்தாண்டம் தினசரி சந்தையை புதுப்பிக்கும் பணிக்கு மதிப்பீடு தயார் செய்ய தேவையான கட்டிட வடிவமைப்பு பெறுவதற்கு மண் பரிசோதனை செய்ய வேண்டியுள்ளது. அதற்கென அரசினர் தொழில் நுட்ப கல்லூரி, திருநெல்வேலி அவர்களிடமிருந்து மண் பரிசோதனை மற்றும் கட்டிட உறுதி தன்மை சோதனை ஆகியவற்றிகென விலைப்பட்டியல் ரூ.35,400/-க்கு 30-11-2021-ல் கடிதம் பெறப்பட்டுள்ளது. ஆகவே பணியின் அவசரம் கருதி இப்பணியினை மேற்கொள்ள ரூ.35,400/-க்கு வங்கி வரைவோலை மூலம் தொழில் நுட்ப கல்லூரி, திருநெல்வேலிக்கு அனுப்பவும் மேற்படி தொகையினை வருவாய் நிதியில் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண்.1967/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3782**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பிரிவு வாகனம் TN75AL.6628 ஏற்பட்டுள்ள பழுதினை சரி செய்ய உள்ளூர் விலைப்புள்ளி 3 எண்ணம் பெறப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள அஷ்சய மோட்டார்ஸ் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளி தொகையான ரூ.19,950/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு பணியினை மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.234/2020/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3783**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 3</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கழிவுநீர் டேங்கர் லாறி TN74W.0236-க்கு 2021-2022-ம் ஆண்டிற்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய உள்ளூர் விலைப்புள்ளி 3 எண்ணம் பெறப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள கணேஷ் மோட்டார்ஸ் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளி தொகையான ரூ.30,100/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு,
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2295/2018/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3784**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 4</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN75P.1813-ல் ஏற்பட்டுள்ள பழுதினை சரி செய்ய உள்ளூர் விலைப்புள்ளி 3 எண்ணம் பெறப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள அஷ்யா மோட்டார்ஸ் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளி தொகையான ரூ.30,950/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு,
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2795/2017/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3785**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 5</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN75L.0828-க்கு டயர்கள் பழுதடைந்துள்ளதால் புதியதாக 4 டயர்கள் வாங்கி பொருத்த ரூ.31,600/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மூன்று உள்ளூர் விலைப்புள்ளிகள் வரப்பெற்றத்தின் விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்வருமாறு

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | சொக்கலிங்கம் நாடார் டயர் சோண், மார்த்தாண்டம் | 31600 |
| 2 | ஜெகின் டயர், மார்த்தாண்டம் | 32650 |
| 3 | எஸ்.எஸ். டயர், சிராயங்குழி | 32100 |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள சொக்கலிங்கம் நாடார் டயர் சோண் என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கிட மன்றத்தின் அனுமதிக்கு

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1002/2018/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3786**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 6</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN75M.4923-க்கு பேட்டரி பழுதடைந்துள்ளதால் புதிய பேட்டரி மாணிக்கம் பேட்டரி ஒர்க்ஸ் என்ற நிறுவனத்திடமிருந்து ரூ.4,700/- வாங்கியமைக்கு ஓட்டுநர் திரு. சுந்தர்சிங் என்பவரால் செலவு செய்யப்பட்டது. மேற்படி செலவு செய்யப்பட்ட தொகையினை ஒட்டுநருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2295/2019/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3787**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 7</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN75J.8227-க்கு டிப்பர் பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்த வகைக்கு அஷ்யா மோட்டார்ஸ் என்ற நிறுவனத்திடமிருந்து ரூ.3,400/- செலவு செய்தமைக்கு ஒட்டுநர்

திரு. விஜயகுமார் என்பவருக்கு மேற்படி செலவு செய்யப்பட்ட தொகையினை ஒட்டுநருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2778/2012/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3788**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN75AL.6196-க்கு டயர்கள் பழுதடைந்துள்ளதால் புதியதாக 5 டயர்கள் வாங்கி பொருத்த ரூ.39,200/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மூன்று உள்ளூர் விலைப்புள்ளிகள் வரப்பெற்றத்தின் விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்வருமாறு

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | சொக்கலிங்கம் நாடார் டயர் சோண், மார்த்தாண்டம் | 39200 |
| 2 | ஜெகின் டயர், மார்த்தாண்டம் | 40600 |
| 3 | எஸ்.எஸ். டயர், சிராயங்குழி | 39900 |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள சொக்கலிங்கம் நாடார் டயர் சோண் என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கிட மன்றத்தின் அனுமதிக்கு

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.113/2019/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3789**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

குழித்துறை நகராட்சியில் தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு பணிக்கு ஆலம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது மழை காலம் மற்றும் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் ஆலம் அதிக அளவில் தேவைப்படுகிறது. ஆகவே பணியின் அவசர அவசியத்தை

கருத்தில் கொண்டு புதிதாக 5000 கிலோ ஆலம் வாங்கி வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு,- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2738/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3790**
**அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் எண். 10

குழித்துறை நகராட்சி பொதுசுகாதார பிரிவிற்கு கொசு மருந்து புகை இயந்திரம் போதுமான அளவில் இருப்பில் இல்லாததால் 2 புகை தெளிப்பான் இயந்திரம் வாங்கி வழங்க பொதுசுகாதார அலுவலர் அறிக்கையின் அடிப்படையில் புதியதாக 2 புகை தெளிப்பான் இயந்திரம் வாங்கிட மதிப்பீடு ரூ.175000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு,- மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.2508/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3791**
**அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் எண். 11

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான சப்பாத்து நீரேற்று நிலையத்திலுள்ள Electrical Control Panel Phase change over Star deltastarters Bus bar Board Capacitor arrangement ஆகிய பணிகளுக்கு மதிப்பீடு தொகை ரூ.3.50 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள 19-11-2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.P. ஜெயசந்திரன் | மதிப்பீட்டை விட 0.34% கூடுதல் |
| 2 | திரு.K.H. கிருஷ்ணதாஸ் | மதிப்பீட்டை விட 0.77% கூடுதல் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 திரு.P. ஜெயசந்திரன் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.1013/2021/இ1

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3792**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 12</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் இடத்திற்கு 20H.P.Shredder Cum Pulverizer ஒரு இயந்திரம் வாங்கும் பணிக்கு ரூ.5,05,000/- மதிப்பீட்டிற்கு 19-11-2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.B. சுமன் | மதிப்பீட்டை விட 0.14% கூடுதல் |
| 2 | திரு.V. வர்கீஸ் விக்டர் | மதிப்பீட்டை விட 0.16% கூடுதல் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 திரு.B. சுமன் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.1485/2021/இ1

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3793**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 13</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.4-ல் பெருந்தெருவில் அமைந்துள்ள சுடுக்காட்டில் சுற்றிலும் சுற்று சுவர் கட்டுதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.7.30 இலட்சத்தில்

மதிப்பீட்டிற்கு 19-11-2021-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.எஸ். பாபு | மதிப்பீட்டை விட 0.08% குறைவு |
| 2 | திரு.பி ஜெயராஜன் | மதிப்பீட்டை விட 0.93% கூடுதல் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 திரு.எஸ். பாபு என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.1118/2021/இ1

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3794**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 14</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3-ல் உள்ள கழுவன்திட்டை ஆர்.சி.தெருவில் குருசடி அருகில் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டிற்கு பணிகள் மேற்கொள்ள 19-11-2021-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.R. சுரேஷ்ராஜ் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |
| 2 | திரு.J.M. பொன்ராஜ் | மதிப்பீட்டை விட 2.55% கூடுதல் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 திரு.R. சுரேஷ் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.1608/2021/இ1

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3795**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான ஆர்.சி.தெரு கழிப்பறை சமீபம் உள்ள கிணறு, குழித்துறை தபால் நிலையம், இடக்குளம், கிங்ஸ் மருத்துவமனை அருகிலுள்ள மொத்தம் 4 கிணறுகள் தூர்வாருதல் பணிக்கு மதிப்பீடு ரூ.1.75 இலட்சம் மதிப்பீட்டிற்கு பணிகள் மேற்கொள்ள 19-11-2021-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.C. ராஜன் | மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| 2 | திரு.A. ஆன்றணி | மதிப்பீட்டை விட 12.28% கூடுதல் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 திரு.C. ராஜன் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.1607/2021/இ1

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3796**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளுக்கும் குடிநீர் வினியோகம் செய்வதற்கு சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள மின்மோட்டார்கள், சப்பாத்து நிலையத்திலுள்ள Submerible Motor-கள் இடைக்குளம் நீரேற்று நிலையத்திலுள்ள மோட்டார்கள் மேலும் இதர உபயோகத்திற்கும் அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணறுகளிலுள்ள மோட்டார்கள் ஆகியவைகள் பழுதுகள் சரி செய்து வருடாந்திர பராமரிப்பிற்கு மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் 29-09-2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மதிப்பீட்டை விட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கோரியதால் 22-10-2021-ல் மீண்டும் இரண்டாவது முறையாக மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் மதிப்பீட்டை விட 18.71% மிக குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரியதால் மூன்றாவது முறையாக மீண்டும் 19-11-2021-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. அதில் ஒருநபர் மட்டும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். ஆகவே ஒரு நபர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க இயலாத

காரணத்தினால் மீண்டும் மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1757/2021/இ1

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3797**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 17</u>**

குழித்துறை நகராட்சியில் வார்டு 1 முதல் 21 வரையுள்ள 1718 எண்ணம் கொண்ட தெருவிளக்குகளுக்கான பராமரிப்பு பணிகள் கங்கா எலக்ட்டிக்கல்ஸ், திருநெல்வேலி என்ற தனியார் ஒப்பந்த நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்த காலம் 06-12-2021 உடன் முடிவடையும் நிலையில் உள்ளதால் ஏற்கனவே அனுமதியளிக்கப்பட்ட ஒப்பந்த விலைவிகிதத்தில் மீண்டும் ஒராண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்ய கேட்டு Sree Ganga Electricals, Tirunelveli என்ற நிறுவனத்தாரர் 20-10-2021-ல் கடிதம் கொடுத்துள்ளார். அதன்படி ஏற்கனவே உள்ள விலைவிகிதத்தில் நீட்டிப்பு செய்ய அனுமதி கேட்டு மன்றத்தின் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் மூலம் 29-11-2021-ல் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது பருவமழை காலமாக உள்ளதாலும் பொதுமக்களின் நலன் கருதி நகராட்சி பகுதியிலுள்ள எரியாத தெருவிளக்குகளை உடனுக்குடன் சரி செய்து இயக்கிட அரசிடமிருந்து அனுமதி உத்தரவு வரும்வரை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் 12/2021, 1/2022 மற்றும் 2/2022 ஆகிய மூன்று மாதங்களுக்கு மேற்படி ஒப்பந்ததாரரிடமே ஒப்பந்தம் நீட்டிப்பு செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ.6,40,000/- (GST 12% உட்பட) ஆகும் செலவினத்தை Sree Ganga Electricals, Tirunelveli என்ற தனியார் ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒப்பந்த நீட்டிப்பு செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1140/2020/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3798**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 18</u>**

குழித்துறை நகராட்சி அரசின் விளம்பரம் மற்றும் 100 நாள் சாதனைகளை மாவட்ட ஆட்சியரின் அனுமதியின் பேரில் தினசரி பத்திரிக்கைகளில் வெளியிட்டதின் பேரில் கீழ்கண்ட பத்திரிக்கைகளிடமிருந்து பெறப்பட்டுள்ள பட்டியல் தொகையினை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1) தினமலர் - ரூ. 9996
2) மாலை தமிழகம் - ரூ.14700

----------------

ரூ.24696

---------------

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1151/2017/அ2.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3799**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 19</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களை 25-11-2021 அன்று பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

6. மார்த்தாண்டம் பேருந்து நிலையம் A. பிளாக் கடை எண்.13

| | | |
|---|---|---|
| (i ) | விஜயராஜன் ,<br>த/பெ. செல்லப்பன்,<br>செக்கிட்டவிளை,<br>விரிகோடு. | மாதவாடகை<br>ரூ.3850/- |
| (ii ) | ரமேஷ்குமார்,<br>புதுச்சேரிவிளை,<br>விரிகோடு. | மாதவாடகை<br>ரூ.4050/- |

7.(1) பி.பி. முனுசாமி வணிகவளாகம் கடை G.8

| | | |
|---|---|---|
| (i ) | S. செய்யது அலி,<br>நம்பாளி,<br>நித்திரவிளை | மாதவாடகை<br>ரூ.7700/- |

(2) பி.பி. முனுசாமி வணிகவளாகம் கடை G.9

(i ) S. செய்யது அலி, நம்பாளி, நித்திரவிளை. — மாதவாடகை ரூ.7500/-

8. குழித்துறை சந்திப்பு வணிகவளாக கடை எண்.4

(i ) ஆஷா காட்வின், கொற்றாடை, குழித்துறை. — மாதவாடகை ரூ.4100/-

(ii ) இம்மானுவேல் பிறைட், கொற்றாடை, குழித்துறை. — மாதவாடகை ரூ.4000/-

வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் (6) மார்த்தாண்டம் பேருந்து நிலையம் A.பிளாக்கடை எண்.13 குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

(7) பி.பி.முனுசாமி வணிகவளாகம் கடை எண்.G8 மற்றும் G9-க்கு தலா ரூ.7700/- ரூ.7500/-க்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

(8) குழித்துறை சந்திப்பு வணிகவளாகம் கடை எண்.4-க்கு குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

அ.கு.- பி.பி.முனுசாமி வணிகவளாகம் கடை எண். G.8 மற்றும் G.9-க்கு உயர்ந்த தொகைக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியுள்ளதால் உரிமம் வழங்கலாம். இதர இனங்களுக்கு மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம். (ந.க.எண்.2036/2018/அ2.)

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3800**

**அலுவலக குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

<u>**பொருள் எண். 20**</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரையின்படி குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சமுதாய கழிப்பிடங்கள் வி.எல்.சி. சப்பாத்து சமீபம் மற்றும் மார்த்தாண்டம் காய்கறி சந்தை பகுதியில் அமைந்துள்ள கழிப்பறைகளையும் பராமரிப்பு செய்ய ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகர்மன்றத்தீர்மான எண்.3729, நாள் 17-09-2021-ன்படி நிர்வாக அனுமதிக்கு என நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு 28-09-2021-ல்

பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.19039/2021/இ2, நாள் 19-11-2021-ன் மூலம் Operational and Maintenance Gap filling Interest fund 2021-2022-ன்கீழ் இரண்டு சமுதாய கழிப்பிடங்களுக்கு வி.எல்.சி.மைதானம் சமீபம் மற்றும் மார்த்தாண்டம் காய்கறி சந்தை சமீபம் ஆகிய சமுதாய கழிப்பிடங்களுக்கும் ரூ.3.33 இலட்சமும் ஒரு பொது கழிப்பிடத்திற்கு வி.எல்.சி. கலையரங்கம் அருகில் ரூ.3.00 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் மேற்படி பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2127/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3801**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 21**

குழித்துறை நகராட்சி பருவ மழை காரணமாக ஏற்பட்ட பேரிடர் காரணமாக முகாம்களில் தங்க வைக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசிய வசதிகள் செய்திடவும் ஏற்படும் செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிடவும், பணியின் அவசரம் கருதி குறைந்த விலைப்புள்ளி அளித்த திரு. பாபு என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று தொகை ரூ.38,154/- வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2834/2021/அ2.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3802**

**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 22**

குழித்துறை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் மண்டலம் வாரியாக மனித சக்தியினை பயன்படுத்தி தூய்மை பணி மேற்கொள்ள M/S. Southern Solid Waste Management என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.3631, நாள் 31-12-2020-ன்படி மூன்றாவது ஆண்டிற்கு உரிமம் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டு 31-12-2021-ல் உரிமம் முடிவடைய உள்ள நிலையில் தற்போது மேற்படி அனைத்துப் பணிகளையும் வெளிகொணர்வு முகமை மூலம் பணிகளை மேற்கொள்ள

அனுமதி வேண்டி சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நாளது தேதி வரை மேற்படி பணிகளுக்கு அனுமதி பெறப்படாமல் உள்ளதாலும் பணியின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டும் 01-01-2022 முதல் 28-02-2022 வரையிலான இரண்டு மாதங்களுக்கு மேற்படி ஒப்பந்ததாரரிடமே ஒப்பந்த பணி நீட்டிப்பு செய்திடவும் அதே ஒப்பந்த விலை விகிதத்தில் பணியினை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2689/2017/அ2.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3803**

**அனுமதிக்கப்பட்டது.**

**ஒப்பம்/திருமதி. க. ராமதிலகம்,**
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,**
**குழித்துறை நகராட்சி.**

**/.உண்மை நகல் /**

**ஆணையாளர்,**
**குழித்துறை நகராட்சி.**